

# அமதிகளின்

1848 யாழ் மாகாணம் 1998

# முப்பொன் விழா

அமல மரித் தியாகிகள் பணி வாழ்வின்

# 150 ஆண்டுகள் நிறைவில்

அமலமரித் தியாகிகளின் முதல்வர்

பேரருட்திரு. மார்செல்லோ சாகோ அ. ம. தி

தலைமையில்

ஆயர்கள், குருக்கள், துறவியர் பொது நிலையினர் அனைவரும் இணைந்து

ஊற்றும் உறைவிடமுமாகிய தந்தையாம் இறைவனுக்கு மகிழ்ந்து அளிக்கும்

# நன்றித் திருப்பலி

தை 18, 1998 ஞாயிற்றுக்கிழமை

மாலை 4-00

யாழ். மரியன்னை பேராலயம்

# சமர்ப்பணம்

அழகிய
இலங்கைத் தீவகத்தில்
இறையரசுக் கனவை நனவாக்கவும்,
சபை நிறுவுனரும் எமது தந்தை
யுமான இயூஜின் டீ மசனெட்
அவர்களில் மிளிர்ந்த அருங்
கொடையை, தொடர்
கதையாக்கவும் பிற
நாடுகளிலிருந்தும்
சொந்த மண்ணி
லிருந்தும் அமல
மரித்தியாகிகள்
குடும்பத்தில்
இணைந்து

தம் உயிர், உடல் யாவையும் இறை
பணிக்கென வாரிவழங்கிய
1 கர்தினால், 12 பேராயர்கள் — ஆயர்கள்
372 குருக்கள், 36 அருட்சகோதரர்கள்
வெளியூர்களில் உதிர்ந்த 50 ஏனைய அமதிகள் அனைவரையும்
உமது பாத மலரடிகளில் உயிர்ப்பூக்களாக
சூடி விடுகின்றோம்

இறைவா மண்வீட்டைத் துறந்து விண்வீட்டையடைந்த
அனைத்து அமதிகளும் உமது பேரொளியில்
நீங்காப் பேரானந்தம் துய்ப்பார்களாக

பவனி

— மங்கள நாதஸ்வர இசை

— தமிழ் மணம் கமழும் வரவேற்பு

— வரவேற்பு நடனம் (சென். ஜோண் பொஸ்கோ பாடசாலை சிறுமியர்)

முன்னுரை: அருட்திரு. சூசை டேமியன் அ.ம.தி.

## வரவேற்புப் பாடல்

தீபங்கள் கரமேந்தி திருக்கோயில் படியேறினேன்
திரியேக தேவனுந்தன் திருத்தாள் பணிகின்றேன்
நற்செய்தி நானாக நானிலம் உனது அரசாக
ஆவியில் அர்ச்சித்து எனை அனுப்புவாய்

1

இருளும் மருளும் மங்கிய விழிகளில்
அருளும் ஒளியும் அளித்திட...
அழுகியும் ஒழுகியும் போன மனங்களை
தழுவி அணைத்து உன்முகம் காட்டிட
ஒதுங்கியும் ஒடுங்கியும் ஓடிய உள்ளங்களை
விடுதலை இறை அரசில் இணைத்திட......

2

ஏழ்மையில் கீழ்மையில் அடிபடுவோர்க்கு
விடுதலை வாழ்வை ஈந்திட
ஓலங்கள் அவலங்கள் கேட்பவர்க்கு
நற்செய்தி கீதம் முழங்கிட
காயமும் அபாயமும் சுமந்துகொண்டு
இருப்போர்க்கு
அருள்தரும் ஆண்டினை அறிவிக்க

"எரியாத திரிகளால் எனக்குப் பயனேது? எமது குழுவில் சுடர் விட்டு எரியும் திரிகளாய் இருங்கள் அல்லாவிடில் வெளியேறுங்கள்"

புனித இயூஜின் டீ மசனெட்

குத்து விளக்கேற்றல்

வரவேற்புரை

அருட்திரு. பி. யேசுநேசன் அ.ம.தி.
(யாழ். அமதி மாகாண முதல்வர்)

திருப்பலி ஆரம்பம்

மன்னிப்பு வழிபாடு

ஆண்டவரே இரக்கமாயிரும் //
கிறீஸ்துவே இரக்கமாயிரும் //
ஆண்டவரே இரக்கமாயிரும் //

உன்னதங்களிலே இறைவனுக்கு மாட்சிமை உண்டாகுக.
உலகினிலே நன்மனத்தவர்க்கு அமைதியும் உண்டாகுக.

- சபை மன்றாட்டு (ஆங்கிலம்)

# இறைவார்த்தை வழிபாடு

- முதல் எடுத்துரைப்பு ஏரேமியா 31: 31-34
(திருக்குடும்பக் கன்னியர்)

## தியானப் பாடல்

பதிலுரைப் பாடல்: ஆண்டவரின் ஆவி என்மேலே
ஏனெனில் அவர் அபிஷேகம் செய்துள்ளார்

1. எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும்
சிறைப்பட்டோர் விடுதலை அடைவர் என
அறிவிக்கவும்
ஆண்டவர் என்னை தேர்ந்தெடுத்தார்

"ஓர் பெரிய வெள்ளியன்று திரச்சிலுவையை உற்றுநோக்கிய என் கண்களில் வழிந்தோடிய கண்ணீர் இன்பத்தில் மூழ்கியிருந்த என் பாவ ஆன்மாவைத் தொட்டது. இதுவே என வாழ்வின் திருப்புமுனை"

புனித இயூஜின் டீ மசனெட்

2. உனை அன்று அழைத்தது நாமே
உரிய பெயரை வைத்ததும் நாமே
அன்று உனை மீட்டதும் நாமே

3 நிறை உண்மைக்கு சாட்சி சொல்லவும்
நோயுற்றோரை குணமாக்கவும்
ஆண்டவர் என்னை தேர்ந்தெடுத்தார்

4. நெருப்பின் நடுவே நடந்தாலும்
ஆழ்கடலை தான் கடந்தாலும்
அருகிலேயே நாம் இருக்கிறன்றோம்

**இரண்டாம் எடுத்துரைப்பு**

எபேசியர்: 4; 7- 16

(செபமாலைத் தாசர் கன்னியர்)

**நற்செய்திப் புகழ் பாடல்:**

"நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். எந்நாளும் உங்களோடு இருக்கின்றேன்"
அல்லேலூயா அல்லேலூயா

**நற்செய்தி எடுத்துரைப்பு:**

லூக்கா 24: 44- 53

(யாழ். மறைமாவட்டக் குரு)

**மறையுரை (ஆங்கிலம்)**

மறையுரையின் பொழிப்பு தமிழில்
**அருட்திரு. பிரான்சிஸ் டானியல்** அ.ம.தி.

**விசுவாச அறிக்கை (பாடல்)**

**காணிக்கை**

பல்வேறு பங்குத் தளங்களிலிருந்து இறைமக்கள் காணிக்கை கொண்டு வருவர். அடையாள பூர்வமாக வழங்கும் இக்காணிக்கைகளோடு எம்பணி வாழ்வு சிறக்க வேண்டுதல்கள் செய்வோம்.

10.08.1847ல் யாழ் பகுதி பணியேற்பின் போது ......
"பூமியிலேயே அழகானதொரு பணிக்களத்தை நாம் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். எத்துணை பரந்த பணிக்களம் அது!"
புனித. இயூஜின் டீ மசனெட்

# காணிக்கைப் பாடல்

உண்மைப் பலியை உணர்ந்து தருகின்றோம்
உலகம் வாழ எம்மைத் தருகின்றோம் — 2

1

குடிசையில் எரியும் விளக்கினை அணைத்து — உன்
கோபுர தீபம் ஏற்றி வைத்தோம்
ஏழையின் பசியினை மறந்து உனக்கு
காய்களும் கனிகளும் படைத்து நின்றோம்

ஸா / தஸநி / நீ / பநிதா /
கபதா / பதபா / தநிதா /
ஸஸா நி / தப / நிநீத / பக / பநிதா

மனநிலை மாறி புதுப்பலி தந்தோம்
மனிதனுக்காக எம்மையே தந்தோம்
மனிதன் வாழ எம்மைத் தந்தோம்
ஏற்பாயே .........
உண்மைப் பலியை .. ...

ஸக / பதநித / பக / தநிஸநி / பத / நிஸ / கஸ
தநிஸ / தநிஸ / கநி / ஸநிதப / ஸநித / ஸநித
நிஸ / கஸநித / நிஸகா / நிஸகா / தஸ / திநிஸ
ஸநி / பதநி / பதநிஸ / ஸஸதநி / நிநிதப
தநிஸா — 3

2

பாலுக்கும் கூழுக்கும் பஞ்சம் என்றாலும் — உன்
பல்லாக்கு தூக்க ஓடி வந்தோம்
பாமரன் கண்ணீர் துடைக்க மறந்து
உனக்கு ஆறுதல் சொல்ல வந்தோம்
ஸா ............

மனிதனின் கவலை தீர்த்திட வந்தோம்
மனமகிழ்வோடு எம்மையே தந்தோம்
மனிதன் வாழ எம்மைத் தந்தோம் ஏற்பாயே......

> 'ஒடுக்கப்பட்டோரை விழித்து மறையுரையாற்றுகையில்......
> நீங்கள் இறைவனின் பிள்ளைகள்; இயேசுக் கிறீஸ்துவின் சகோதரர்கள் ; நீங்கள் பெறுமதியுடையவர்கள்; மதிப்பிற்குரியவர்கள்''
>
> புனித இயூஜின் டீ மசனெட்

காணிக்கை மன்றாட்டு (ஆங்கிலம்)

## தூயவர்

தூயவர், தூயவர், தூயவர்
மூவுலஇறைவனாம் ஆண்டவர்
வானமும் வையமும் யாவினும்
மாட்சிமையால் நிறைந்துள்ளன
உன்னதங்களிலே ஓசான்னா
ஓசான்னா ஓசான்னா
ஓ...... சான்னா ஓ.... சான்னா
ஓ...... சான்னா ஓசான்னா
ஆண்டவர் திருப்பெயரால்
வருபவர் ஆசி பெற்றவரே
உன்னதங்களிலே ஓசான்னா
ஓசான்னா ஓசான்னா
ஓ .... சான்னா ஓ...... சான்னா
ஓ ..... சான்னா ஓசான்னா

## EUCHARSTIC PRAYER III

### வாழ்த்தொலி

ஆண்டவரே தேவரீர் வருமளவும்
உமது மரணத்தை அறிக்கையிடுகின்றோம்
உமது உயிர்ப்பையும் எடுத்துரைக்கின்றோம்''

### சிறப்புப் புகழுரை

*Amen Our hearts to you*
*Amen Our praise to you*
*Amen Our thanks to you*
Amen

> ''ஒரே உள்ளமும், ஒரே மனமும் கொண்டு' நீங்கள் உருவாக்கும் குழுமத்தில் குடும்ப உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்''
>
> புனித இயூஜின் டீ மசனெட்

## ஆராத்தி

தந்தையாம் இறைவனுக்கு
அஞ்சலி செய்கின்றோம்.

அழைக்கும் ஆண்டவர்க்கு
தீபத்தாலே அஞ்சலி.

வாழ்வாளிக்கும் வள்ளலுக்கு
தூபத்தாலே அஞ்சலி

மீட்பளிக்கும் தேவனுக்கு
மலர்களாலே அஞ்சலி.

## ஆண்டவரின் செபம்

### பாடல்

விண்ணகத் தந்தையே உமது நாமம்
அர்ச்சிக்கப்படுவதாக

உமது இராச்சியம் வருக உமது சித்தம்
விண்ணகத்தில் செய்யப்படுவது போல
பூமியிலேயும் செய்யப்படுவதாக
எங்கள் அனுதின உணவை எங்களுக்கு இன்று
அளித்தருளும்
எங்களுக்கு தீமை செய்தவர்களை நாங்கள்
பொறுப்பது போல எங்கள் பாவங்களைப்
பொறுத்தருளும் எங்களைச் சோதனையில் விழவிடாதேயும்
தீமையிலிருந்து எங்களை இரட்சித்தருளும் ஆ... ஆ ஆ...
விண்ணகத் தந்தையே......

> ஆயர் செமேரியாவிற்கு வரைந்த மடலில்......
> நான் இலங்கையிலுள்ள ஒவ்வொரு அ. ம. தி. களுடனும் நேரடியாகத் தொடர்பு கொள்ள அவலாவுள்ளேன். என் எண்ணத்திலும், உள்ளத்திலும் ஒவ்வொருவரும் விசேட இடம் பிடித்துள்ளார்கள்''
>
> புனித. இயூஜின் டீ மசனெட்

## சமாதானப் பாடல்

இறைவன் சொல்வது
சமாதானமே சமாதானமே } 3

## நற்கருணைப் பாடல்

ஆ ஆ ஆ ஆ / ஆ ஆ ஆ ஆ

புது உறவு இந்த விருந்தில் மலர்ந்தது இறைவா
புனிதன் உன் வரவால் எந்தன் இதயம்
மகிழ்கின்றதே தலைவா
புது உறவு ......

ஆனந்தம் ஆனந்தம் என்றென்றும் ஆனந்தம்
எல்லோர்க்கும் ஆனந்தம் ஆனந்தமே
புது உறவு ......

பஸ / பரி / ஸரிகம / கஸரீ / ஸகரீ / நிநிஸ
பஸநி / தப / தப / மத / பா

1

இறைவா உன் விருந்தில் பங்கு கொள்வோமே
வசந்தம் கண்டிடுவோம் உன்னில் வாழ்ந்திடுவோம்
இனி எம் கரங்கள் பற்றி நடந்து
வாழ்வில் உயர்ந்திடுவோம்
புது உறவு ......

பநிபமகஸரிஸ / நிஸநிதமகரி / நிஸநி / நிபம

2

உலக இன்பங்கள் எம்மைச் சூழ்ந்தாலும்
அமைதி இல்லையே அவையும் என் மனமே
இனி எம் விருந்தில் பங்கு கொள்வோம்
நிறைவினைக் காண்போமே
புது உறவு ......

> சபையின் முதல் தோழனான ரம்பியரை அழைத்த போது......
> ''அப்போஸ்தலர்களின் அடிச்சுவடுகளைப் பின்தொடர ஆவலும் துணிவும் கொண்ட மனிதர்களை என் சபைக்குத் தெரிவு செய்ய விரும்புகிறேன்.''
>
> புனித இயூஜின் டீ மசனெட்

# காணிக்கைப் பாடல்

உண்மைப் பலியை உணர்ந்து தருகின்றோம்
உலகம் வாழ எம்மைத் தருகின்றோம் — 2

1

குடிசையில் எரியும் விளக்கினை அணைத்து — உன்
கோபுர தீபம் ஏற்றி வைத்தோம்
ஏழையின் பசியினை மறந்து உனக்கு
காய்களும் கனிகளும் படைத்து நின்றோம்

ஸா / தஸநி / நீ / பநிதா /
கபதா / பதபா / தநிதா /
ஸஸா நி / தப / நிநீத / பக / பநிதா

மனநிலை மாறி புதுப்பலி தந்தோம்
மனிதனுக்காக எம்மையே தந்தோம்
மனிதன் வாழ எம்மைத் தந்தோம்
ஏற்பாயே .........
உண்மைப் பலியை .. ...

ஸக / பதநித / பக / தநிஸநி / பத / நிஸ / கஸ
தநிஸ / தநிஸ / கநி / ஸநிதப / ஸநித / ஸநித
நிஸ / கஸநித / நிஸகா / நிஸகா / தஸ / திநிஸ
ஸநி / பதநி / பதநிஸ / ஸஸதநி / நிநிதப
தநிஸா — 3

2

பாலுக்கும் கூழுக்கும் பஞ்சம் என்றாலும் — உன்
பல்லாக்கு தூக்க ஓடி வந்தோம்
பாமரன் கண்ணீர் துடைக்க மறந்து
உனக்கு ஆறுதல் சொல்ல வந்தோம்
ஸா ............

மனிதனின் கவலை தீர்த்திட வந்தோம்
மனமகிழ்வோடு எம்மையே தந்தோம்
மனிதன் வாழ எம்மைத் தந்தோம் ஏற்பாயே......

> 'ஒடுக்கப்பட்டோரை விழித்து மறையுரையாற்றுகையில்......
> நீங்கள் இறைவனின் பிள்ளைகள்; இயேசுக் கிறீஸ்துவின் சகோதரர்கள் ; நீங்கள் பெறுமதியுடையவர்கள்; மதிப்பிற்குரியவர்கள்''
>
> புனித இயூஜின் டீ மசனெட்

காணிக்கை மன்றாட்டு (ஆங்கிலம்)

## தூயவர்

தூயவர், தூயவர், தூயவர்
மூவுலகிறைவனாம் ஆண்டவர்
வானமும் வையமும் யாவினும்
மாட்சிமையால் நிறைந்துள்ளன
உன்னதங்களிலே ஓசான்னா
ஓசான்னா ஓசான்னா
ஓ...... சான்னா ஓ.... சான்னா
ஓ...... சான்னா ஓசான்னா
ஆண்டவர் திருப்பெயரால்
வருபவர் ஆசி பெற்றவரே
உன்னதங்களிலே ஓசான்னா
ஓசான்னா ஓசான்னா
ஓ .... சான்னா ஓ...... சான்னா
ஓ..... சான்னா ஓசான்னா

# EUCHARSTIC PRAYER III

## வாழ்த்தொலி

ஆண்டவரே தேவரீர் வருமளவும்
உமது மரணத்தை அறிக்கையிடுகின்றோம்
உமது உயிர்ப்பையும் எடுத்துரைக்கின்றோம்''

## சிறப்புப் புகழுரை

*Amen Our hearts to you*
*Amen Our praise to you*
*Amen Our thanks to you*
Amen

''ஒரே உள்ளமும், ஒரே மனமும் கொண்டு' நீங்கள் உருவாக்கும் குழுமத்தில் குடும்ப உணாவை வளர்த்துக் கொள்ளுங்கள்''

புனித இயூஜின் டீ மசனெட்

# வட இலங்கையில்
# அமல மரித் தியாகிகளின்
# 150 ஆண்டுப் பணிகள்

யாழ்ப்பாணம், மன்னார், அனுராதபுரம், திருமலை—மட்டுநகர், சிலாபம், குருநாகல் ஆகிய தற்போதைய மறை மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகள் (Jaffna Vicariate அமலமரித் தியாகிகள் சபையின் ஆரம்பப் பணித் தளங்கள் ஆகும்

இப்பகுதியின் முதல் ஆயர் ஓறாசியோ பெற்றகீனி என்பவர், அமலமரித் தியாகிகளின் நிறுவுனரும் மார்செயில் ஆயருமாக இருந்த இயூஜின் டீ மசனெட் அடிகளைச் சந்தித்து இலங்கையின் வடபகுதிக்கு அ. ம. தி-களை அனுப்பி வைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். இவ்வரலாற்றுச் சந்திப்பின் பெறுபேறாக ஸ்ரீபன் செமேரியா அடிகளின் தலைமையில் மேலும் மூவர் சியாமின் (27 வயது), கீற்றீங் (24 வயது) சகோ. கஸ்பார் டீ ஸ்ரெபானிஸ் 26 வயது). ஆகியோர் அனுப்பி வைக்கப்பட்டனர் இந்நால்வரும் பெற்றகீனி ஆயரோடு 28-11-1847-ல் காலித்துறைமுகத்தை வந்தடைந்தனர். அதன் பின் இவர்கள் கடல் மார்க்கமாக கொழும்பிலிருந்து புறப்பட்டு 04-02 1848-ல் மன்னாரை சென்றடைந்தனர். அவ்வேளையில் மன்னார்—மாந்தோட்டை பங்குத் தந்தை இறந்து விட்டதால் சியாமின் அடிகளார் அப்பங்குப் பொறுப்பை ஏற்றார். ஏனையோர் தம் பயணத்தை தொடர்ந்து ஊர்காவற்றுறை துறைமுகத்ினூடாக யாழ் மண்ணில் கால் பதித்தனர். 1948-ம் ஆண்டு மாசி மாதத்தில் ஏற்கனவே பணிபுரிந்து கொண்டிருந்த ஐரோப்பிய குருக்களுடன் அமதிகள் தமது பணியை ஆரம்பித்தனர் தொடர்ச்சியாக மேலும் பல அமதிகள் அனுப்பப்பட்டமை வடபகுதி முழுமையையும் தமது பொறுப்பில் கொணர்வதற்கான அறி நறிபாயிற்று 1856-ல் செமேரியா அடிகள் இணை ஆயராக நியமனம் பெற்று மறு ஆண்டில் ஆயராகப் பொறுப்பேற்றார். அவ்வேளை வடபகுதியில் பணிபுரிந்த 20 குருக்களில் பதின்மூவர் (13) அமதிகளாவர். இவ்வளவு சிறிய

ளவு பணியாளர் 258 கோயில்களையும். இன்னும் சிற்றாலயங் களையும் பரிபாலித்தமை ஏனைய கிறீஸ்தவ சூழுமினருக்கு வியப்பூட்டியது ஏற்கனவே பணிபுரிந்து கொண்டிருந்த கோவை ஒறட்டோறியன் குருக்களின் எண்ணிக்கை அருகிச்செல்ல. மக்களின் ஆன்மீகமும் குன்றி குட்டிச் சுவராகிய காலகட்டத்தில் ஆன்மீக மறுமலர்ச்சியை உருவாக்கி பணித்தளங்களை கட்டி யெழுப்பும் பாரிய பொறுப்பு, அதுவே அமதிகளின் பெரும் பொறுப்புக்களாயின அத்தோடு கோவையூர் குருக்களால் கட்டவிழ்த்து விடப்பட்டபிரிவினை வாதங்கள் எரியும் நெருப் பில் எண்ணெய் வார்த்தது போலாயிற்று.

வாந்திபேதி கொலரா போன்ற கொள்ளை நோய்கள் மத்தியிலும் செமேரியா அடிகள் தலைமையில் அமதிகள் குழு வின் தியாகமும் தீரச் செயல்களும் அவர்களது மறையார் வத்தையும் ஆன்மீக பொறுப்பையும் கோடிட்டுக் காட்டின 30 வயது மட்டுமே நிரம்பிய வண. லேய்டியர் அமதி 1851-ல் கொலராவின் கோரப்பிடிக்குள் சிக்குண்டு வதிரியில் உயிர் துறந்தார் இளம் குரவர்களான சியாமினும் லக்கோமும் இத்தகைய மரணத்திற்கு உள்ளாகினர்.

ஆயர் செமேரியாவின் திறமைமிக்க தலைமைத்துவத்துடன் சமமாக இணைந்து கொண்டவர் வண. கிறிஸ்தோப்பர் பொன்ஜீன் அடிகளாவார் இவர்கள் இருவரினதும் அரும்பணி கள் அமல மரித் தியாகிகளின் வளர்ச்சியில் பொற்காலம் போன்று துலங்கியது ஏனெனில் கல்வித்துறையை வளர்த்ததி லும், சதேச குருக்களை உருவாக்கியதிலும் இவர்களுக்கிருந்த தூரநோக்கு மகத்துவமானது. ஆயர் பொன்ஜீன் அவர்கள் மக்கள் தமது தாய்மொழியாம் தமிழில் கல்வி கற்பதை நோக்காகக் கொண்டு சென். ஜோசவ் துறவற சபையை நிறுவினார் எமது கத்தோலிக்க அச்சகத்தின் சிற்பியும் இவரே. பிரென்சுப் புரட்சியின் விளைவாக ஆன்மீகத் தாகத் தில் தவித்த புறொவான்ஸ் நகர மக்களுக்கு தமது மகாஞான வொடுக்க மறையுரைகளால் புத்துணர்வூட்டிய அமதிகள், தம் பணிகளை எம் மண்ணிலும் தொடர்ந்தனர். 1857–ல் ஊர்காவற்றுறை பங்கில் முதல் மகா ஞானவொடுக்கம் 40 நாட்கள் போதிக்கப்பட்டது. இதில் ஆயர் செமேரியாவும்

## நன்றிப் பாடல்

வெள்ளிச் சுரங்களின் அலைகளிலே துள்ளி வருகின்ற
சந்தங்களே
உள்ளம் கனிந்த என் நன்றியினை சொல்லிப் பாடுங்களே
எந்தன் தேவனுக்கே

1

கொடுப்பதில் இன்பம் வைத்தவன்
தன்னையே உண்ணக் கொடுத்தவனை
படிப்பினைகள் சொல்லியவன்
சொன்னபடியே வாழ்ந்தவன்
இடுக்கணுற்று வீழும்போது
எனக்காய் உயிர் கொடுப்பவன்
அந்த நல்ல தேவனுக்கே — என்
நன்றியைக் கூறுங்களே — 2
வெள்ளிச் சுரங்களின்......

2

கருவினில் என்னை அறிந்தவன்
கண்மணி போல வளர்த்தவன்
அறுவடை மிகுந்த பணியிலே
அடியேன் என்னை அழைத்தவன்
அருகில் இருந்து ஆற்றல் பொழிந்து
நிறையானந்தம் தருபவன்
அந்த நல்ல தேவனுக்கே — என்
நன்றியைக் கூறுங்களே — 2
வெள்ளிச் சுரங்களின்......

## இறுதிச் செபம்

## இறுதி ஆசிர் (Latin)

"பலதரப்பட்ட மக்கள் மத்தியிலே ஆற்றும் எமது மீட்புப் பணிக்கு நாம் அணியும் திருச்சிலுவையே ஒரு சான்றிதழ்"

புனித இயூஜின் டீ மசனெட்

## SALVE REGINA

Salve Regina,
Mater misericordiae,
vita, dulcedo et spes nostra, salve!

Ad te clamamus
exsules filii Evae;
Ad te suspiramus,
gementes et flentes
in hac lacrimarum valle.

Eia ergo, advocata nostra,
illos tuos misericordes oculos
ad nos converte;
et Jesum,
benedictum fructum ventris tui,
nobis post hoc exsilium ostende

O clemens,
O pia,
O dulcis Virgo Maria

அனைவரும் அமர்க

சொற்பொழிவுகள்

⚜ அருட்திரு. பேனாட் குயின்ரஸ் அ. ம. தி.
(கொழும்பு அ. ம. தி. மாகாண தலைவர்

⚜ பேரருட் திரு. தோமஸ் சவுந்தரநாயகம்
(யாழ் ஆயர்)

நன்றியுரை

அருட் திரு P. P. பிலிப் பெனான்டோ அ. ம. தி.

---

சபை அங்கீகாரம் பெற்றபோது 1826 மாசி 17-ல்
''அன்னையாம் திருச்சபைதான் எமக்கு ''அமல மரித் தியாகிகள்''
எனும் பெயரைச் சூட்டியுள்ளாள், எனவே அன்புடனும் மதிப்பு
டனும் நன்றி உணர்வோடும் அதை ஏற்றுக்கொள்வதே எம்
மகிழ்ச்சி''

புனித. இயூஜின் டீ மசனெட்

---

மக்கள் மத்தியில் தங்கியிருந்து, பங்கெடுத்து பங்களித்தது அதன் வெற்றிக்கு உறுதுணையானது இத்தகைய ஞான வொடுக்கப் போதனைப் பணியில் சாதனை புரிந்தவர் அருட்திரு சொனாவெல் அடிகளாவார். இவர் இலங்கையின் வடக்கிலும் தெற்கிலும் 70 ஆண்டுகள் பணிபுரிந்து தனியிடத்தைப் பெற்றவர். யாழ் பேராலயப் பங்குத் தந்தையாக பணிபுரிந்த அமல மரித் தியாகி செமேரியா பங்குப் பணிக்கு ஓர் முன் மாதிரியாகத் திகழ்ந்தார். சிறுவர், வளர்ந்தோருக்கான மறைக் கல்வி. பக்திச் சபைகளின் உருவாக்கல், அல்லது புனரமைப்புச் செய்தல் அருட்சாதன வாழ்வை மக்கள் வாழ்வில் ஆழப் படுத்தல் போன்ற அளப்பரிய பணிகளைப் புரிந்த இவர்களை ''யாழ். திருச்சபையைக் கட்டியெழுப்பிய தூண்கள்'' என்று சொன்னால் மிகையாகாது. வானளாவ உயர்ந்து நிற்கும் எண்ணுக் கணக்கான ஆலயங்கள் அவர்களின் ஆன்மீக உரு வாக்கலின் வெளிப்பாடாகும்.

1 ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த மகளிர் கல்விப் பணியை மேலும் விரிவுபடுத்தும் நோக்கோடு 1862ல் ''போதோ திருக் குடும்பக் கன்னியர் சபை'' யினரை எம்நாட் டிற்கு அழைத்து வந்தார் ஆயர் செமேரியா. இலங்கையில் பணியாற்றிய முதல் பெண் துறவியர் சபை இவர்களாதே ஆகும்.

## தொடர் உருவாக்கற் செயற்பாடுகள்

இலங்கை பல மறைமாவட்டங்களாக வகுக்கப்பட்டதை தொடர்ந்து யாழ்ப்பாணம் 1886-ல் ஓர் தனி மறைவட்டமாக உருவாக்கப்பட்டது ஆயர்கள் செமேரியா, பொன்ஜீன் அவர் களையே தூண்களாகக் கொண்டு எழுப்பப்பட்ட யாழ் திருச் சபையை மெருகூட்ட அனுப்பப்பட்டவர்களே ஹென்றி யூலன் (1893-1919) J. A கியோமர் (1924-1950) ஆகிய ஆயர்கள் ஆவர் இவர்கள் தங்கள் சபை நிறுவுனரின் ஆரம்பக் கனவு களை நனவாக்க அயராது பாடுபட்டனர் கிறீஸ்துவை அறியாத மக்கள் மத்தியில் விசுவாச ஒளியை ஏற்றினார்கள்.

மறையின் வளர்ச்சிக்கு ஆயர்கள் செமேரியாவும் பொன் ஜினும் அடித்தளமிட்டிருப்பினும் அவர்களது காலத்தில் கிறீஸ் தவத்தை தழுவிய கணிசமான பிறமதத்தவர் தம் விசுவாசத்தில் உறுதியாக நிலைக்கவில்லை ஏனெனில் கத்தோலிக்கரை திருணமம் செய்யும் பொருட்டும், கொள்ளை நோய்க் காலத்தின் போது அமதிகளின் தீரச் செயல்களால் மேலோட்ட மாகக் கவரப்பட்டதும், அவர்களது அனாதை இல்லங்களில் சிறுபருவத்திலேயே ஏற்பட்ட மதமாற்றத்தின் காரணமாகவும் இவை நிகழ்ந்தன. ஆயினும் அமதிகளின் நிறுவுனர் இயூஜின் டீ மசனெட் வலியுறுத்தி வந்த உண்மையான மறைபரப்புப் பணி ஆயர்கள் யூலன், கியோமர் காலத்திலேயே திட்ட மிடப்பட்டு பாரிய அளவில் நிறைவேற்றப் பட்டன. இப்பணியில் முதலில் ஈடுபட்டவர்கள் அருட்திரு அன்ரனி கிப்பொலைற், ஞானப்பிரகாசர் அடிகளாவார்கள். அன்ரனி அடிகளார் அனுராதபுரம் தொடங்கி மடு - நல்லூர் வரை மறைபரப்பு நிலையங்களை உருவாக்கி அயராது உழைத்து வெற்றி கண்டார். நல்லூரில் மட்டும் இவர்களால் 19 நிலையங் களில் 2000ற்கும் மேற்பட்ட கிறீஸ்தவர்கள் புதிதாக இணைக் கப்பட்டனர். மனம் மாறிய ஏழைக் குடிமக்களை சுரண்டி வாழ்ந்த இந்து - முதலாளி வர்க்கத்தினருக்கு சுவாமி ஞானப் பிரகாசரின் மறைபரப்பு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. இதனால் அவர்களிடம் இருந்து அடிகளாருக்கு எதிர்ப்புக்களும், ஆபத்துக்களும் எழுந்தன. மன்னார் பகுதிகளில் நீண்ட கால மாக நிலை கொண்டிருந்த பிரிவினை வாதம் அமதிகளின் பொறுமையினாலும் விடாமுயற்சியோடு கூடிய உழைப் பினால் முடிவிற்கு கொண்டுவரப்பட்டது. 190?ல் ஆயர் யூலன் அவர்கள் பிரிவினை வாதிகளை ஒப்புரவாக்கி திருச்சபையில் மீண்டும் இணைத்துக் கொண்டார்.

1928ல் எமது பண்பாட்டின் மரபிற்கமைய சுதேச துவற சபையான செபமாலைத் தாசர் சபையை நிறுவ வண பிதா தோமஸ் அடிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர் கியோமர் ஆண்டகையே.

அமதிகள் பொதுவாக மரியாள் மட்டில் பக்திமுயற்சி களையும் யாத்திரைத் தலங்களையும் வளர்த்து வந்தார்

களாயினும் மடுத் திருப்பதியையும், பத்திமா திருப் பதியையும் பெரும் யாத்திரைத் திருத்தலங்களாக வளர்த்த பெருமை ஆயர் கியோமரைச் சாரும். யாத்திரைத் தலங்கள் மறைபரப்புப் பணியின் முக்கிய தளங்களாகத் திகழ்ந்தன. இவரது காலத்தில் நகர மையப் படுத்தப்பட்டிருந்த ஆங்கிலக் கல்வி கிராமப் புறப்பகுதிகளுக்குப் பரவலாக்கப்பட்டது. இதன் விளைவாக ஊர்காவற்றுறை, கரவெட்டி, இளவாலை, மாதகல், மன்னார், அனுராதபுரம் போன்ற இடங்களில் ஆங்கிலக் கல்வி கற்பிக்கப்பட்டது. வண. C. S. மத்தியூஸ் வண T. M. F. லோங் ஆகிய இரு அமதிகளும் புனித பத்திரிசியார் கல்லூரியில் நீண்டகாலப் பணியையும், கல்வி தொடர்பான பல பணிகளையும் தமிழ் மக்களுக்கு ஆற்றியது பலர் அறிந்ததே. வண. லோங் அடிகளார் உருவாக்கிய யாழ் நூலகம் கீழைத்தேயத்திலேயே அதிசிறந்த நூலகங்களில் ஒன்றென வரலாறிலேயே கூறப் பட்டுள்ளது. அறிவுக் களஞ்சியமாகவும் தமிழர் பண்பாட்டின் சின்னமாகவும் திகழ்ந்த இந்நூலகம் இனத்துவேஷிகளால் தீக்கிரையாக்கப்பட்டது எமது வரலாற்றில் தாங்கொணாத் துயரச் சம்பவமாகும்.

அமதிகளின் சமூகப் பணியை பொறுத்த மட்டில் வண. விற்றன் அவர்கள் வடபகுதிக்குப் புகையிரதச் சேவையை செயற்படுத்துவதற்கு உழைத்தவர்களுள் முதன்மையான வராவார். யாழ். பகுதியில் இளைஞர்கள், தொழிலாளர்கள் மத்தியில் 1899 முதல் பணிபுரிந்து யாழ்ப்பாணத்தில் ஒரு "ஜோண் பொஸ்கோ" போன்று மிளிர்ந்த அமலமரித்தியாகி சகோ. குருசோ அவர்களாவார். இதே காலத்தில் கோ மனுவல் அவர்கள் மீனவ இளையோரின் வாழ்வை சதர முயர்த்தி சுபீட்ச வாழ்விற்காக உழைத்தவர். பீடப்பணி யாளரை உருவாக்கி ஆன்மீகத் துறையில் அவர்களை நெறிப் படுத்திய பெருமை வண பிளஸ்ஸோ அடிகளையே சாரும். இவரால் உருவாக்கப்பட்ட பீடப்பணியாளர்களே துறவறத்தில் இணைந்து கொண்டவர்களும், இல்லறத்தில் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தவர்களும் ஆவர்.

2. 1881 ல் விபத்திற்குள்ளான வண. பிளஸ்ஸோ தனது எஞ்சிய 40 வருட காலப் பணிவாழ்வைப் படுக்கையிலிருந்தே தொடர்ந்து ஆற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விரிவாக்கற் பணி

1950 ல் முதல் ஆயரான மண்ணின் மைந்தன் எமிலியானுஸ்பிள்ளையின் தலைமைத்துவத்தில் அமலமரித் தியாகிகளுக்கும், யாழ் மறைவட்டத்திற்கும் ஒரு புதுயுகம் பிறந்தது. அவரது பல சாதனைகளுள் மறைமாவட்டக் குருக்களின் உருவாக்கமும், வளர்ச்சியும். எண்ணிக்கையும் முதன்மையானது. மிகக் குறுகிய காலத்தில் மறை மாவட்டக் குருக்கள் மறைவட்டத்தின் பெரும்பான்மையான பங்குகளையும், நிறுவனங்களையும் பொறுப்பெடுத்துக் கொண்டனர் அக்கால கட்டத்தில் வெளிநாடுகளிலிருந்து பணிபுரிய அனுப்பப்பட்ட அமதிகளின் எண்ணிக்கை அருகிக் கொண்டு போனபோதும் சுதேச அமதிகளின் எண்ணிக்கை அதை ஈடு செய்யும் அளவிற்குப் பெருகிக் கொண்டு வந்தது. இவர்களது திருத்தூதுரைப் பணியின் ஆர்வமும் முதிர்ச்சியும், தம் தாய் நாட்டின் எல்லைகளைக் கடந்து கிழக்காசிய எல்லைகளை நோக்கி தம் இறக்கைகளை விரிக்கத் தூண்டியது. இதன் பெறுபேறாக 1968 ல் இந்தியாவிலும், 1970 ல் பாகிஸ்தானிலும், 1973 ல் வங்காள தேசத்திலும் அமதிகளின் பிரசன்னம் மிளிரலாயிற்று. இதேவேளையில் 1972 ல் யாழ்ப்பாணம் தனது முதலாவது மறைமாவட்ட ஆயர் தியோகுப்பிள்ளையை பெற்றெடுத்தது. அதனைத் தொடர்ந்து பத்து (10) வருடங்களின் பின் யாழ். மறைமாவட்டத்திலிருந்து மன்னார் பகுதி பிரிக்கப்பட்டு அம்மறை மாவட்டத்தின் முதல் ஆயராக மறைமாவட்டக் குரு தோமஸ் சவுந்தரநாயகம் நியமனம் பெற்றார்.

அமதிகள் தொடர்ந்தும் வடமாகாண மறை வட்டங்களிலும், வெளிநாடுகளிலும், பங்குகளிலும், பணிநிறுவனங்களிலும், சமூக சமய நிலையங்களிலும் பணியாற்றுகிறார்கள். மறையுரை, தியானம் உளவளத் துணை, வைத்தியசாலை ஆன்மீகப் பணி, கற்பித்தல், குருத்துவ உருவாக்கம், புனர் வாழ்வு போன்ற சிறப்புப் பணிகளில் ஈடுபாடும் முன்னேற்றமும் கொண்டு விளங்குவது குறிப்பிடத்தக்கது. தமது சபை நிறுவுனர் இயூஜின் டீ மசனெட்டின் கனவை நனவாக்கும் வகையில் அமதிகளின் பலவடிவப் பணிகளும் பரந்து கிடக்கும் பணித் தளங்களும் அமதிகளின் துறவு வாழ்வின் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் எடுத்தியம்பி நிற்கின்றன.

அருட்திரு. S. V. B. மங்களராஜ

'இறைவனது சாம்ராஜ்யத்தை நிலைநாட்டும் பொருட்டு எச்சந்தர்ப்பத்தையும் நழுவவிடாதீர்கள்'

**புனித இயூஜின் டீ மசனெட்**



' அன்புள்ளம் கொண்டவர்க்கு முழு உலகும் சொந்தம்'

லெசத்தோ மக்களின் உள்ளங்களை கொள்ளை கொண்ட

**முத்திப்பேறுபெற்ற ஜோசவ் ஜெராட் அ.ம.தி.**

இந் நன்றித் திருப்பலியில்
இணைந்து கொண்ட
தங்கள் அனைவருக்கும்
எம் இதயபூர்வ நன்றிகள்

விழாக் குழு.

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம் யாழ்ப்பாணம். 1998